**தமிழ் நாடு சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம், சென்னை–2**
**(தமிழ்நாடு அரசு நிறுவனம்)**
**சென்னை எல்லைச் சாலை திட்டம்**
**இணைய வழி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 9 /ஐசிஓடி/சௌசாதி பிரிவு–2/இபிசி–1 / 2020/ நாள் 28.09.2020**

1. தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் செயல் இயக்குநர், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம், சென்னை–2, அவர்களால் சர்வதேச திறந்த நிலை போட்டி ஒப்பந்தப்புள்ளி அழைப்பு முறையில் சென்னை எல்லைச் சாலை திட்டம், பிரிவு - 2, சிப்பம் - 1ல் தச்சூர் (வடிவமைப்பு கி.மீ 21+700) முதல் புன்னபாக்கம் (வடிவமைப்பு கி.மீ 35+000) வரை கடினப்புருவத்துடன் கூடிய புதிய ஆறு வழிச்சாலை அமைத்தல் மற்றும் சாலையின் இரு புறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைக்கும் பணிக்கு பொறியியல், கொள்முதல், கட்டுமானம் (EPC) முறையில் 7 வருட சாலை பராமரிப்பு உட்பட, இணைய வழி ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் 29.09.2020 தேதி 16.00 மணி (இந்திய நேரப்படி) முதல் www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும்.

3. ஒப்பந்தப்புள்ளி முன் அறிவிப்பு கூட்டம் 14.10.2020 ஆம் தேதி 11.00 மணி (இந்திய நேரப்படி) அளவில் நடைபெறும். மேற்கொண்டு தேவைப்படும் தகவல்களுக்கு (சர்வதேச திறந்த நிலை போட்டி ஒப்புந்தப்புள்ளி அழைப்பு) www.tntenders.gov.in என்ற இணைய தளத்தில் பார்த்து கொள்ளலாம்.

4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு திரும்ப பெற இயலாத தொகையாக இந்திய மதிப்பில் ரூ.30,000/– ( ரூபாய் முப்பதாயிரம் மட்டும், வரிகள் உட்பட) செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை அளிப்பதற்கான இறுதி காலக்கெடு: 31.10.2020 தேதி 11.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முன்பாக.

6. இணைய வழியில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்: 31.10.2020 தேதி 11.30 மணிக்கு (இந்திய நேரப்படி).

7. ஒப்பந்தப்புள்ளிக்கான முன் வைப்புத் தொகை ரூ. 160,000,000/– (இந்திய ரூபாய் மதிப்பில் நூற்று அறுபது மில்லியன் ) ஆகும்.

8. மேலும் இதன் தொடர்பான திருத்த அறிவிப்புகள் மின் கொள்முதல் இணைய முகப்பு (e-procurement portal) www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**ஒம்/–**

**செயல் இயக்குநர்,**
**தமிழ் நாடு சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்**
**4வது தளம் எல்.எல்.ஏ கட்டிடம், எண். 735, அண்ணா சாலை, சென்னை–600 002.**
**தமிழ் நாடு, இந்தியா**
**தொலைபேசி எண். 91 44 2852 0000**
**மின்னஞ்சல்: ridc2005@yahoo.co.in**